DEPOSITION OF W ITNESS

| | | |
|---|---|---|
| **In the court of** | **:** | District Munsif – cum – Judicial Magistrate Court, Pennagaram. |
| **Case No.** | **:** | CC No. 11/2023 |
| **Prosecution witness** | **:** | PW - 1 |
| **Date** | **:** | 25.09.2024 |

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : Palani | **Cast** | : |
| **Father's Name** | : Ganapathigounder | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

(Accused persons are present)

**வாக்குமூலம்**

| | | |
|---|---|---|
| நீதிமன்றம் | : | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பென்னாகரம். |
| வழக்கு எண். | : | ஆ.ப.எண். |
| வழக்கு சாட்சி | : | |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

( எதிரிகள் ஆஜரில் இருந்தனர் )

**முதல் விசாரணை**

1. எனது பூர்வீகம்மேட்டுரான் கொட்டாய். நான் தற்போதுசேலம், ஓமலூர் பூசாரிப்பட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு பகல் 12.00 மணியளவில் மேட்டுரான் கொட்டாய் எனது மகன் பூசாரியாகஇருந்தார். அந்த சமயத்தில் சீலநாயக்கனுர் நிலத்தில் எதிரிகள் வெளியாட்களை வைத்து எனதுநிலத்தை ஓட்டினார்கள். அதை நான் தடுத்தேன். எதற்காக நிலத்தை ஓட்டுகிராய் என்று கேட்டதற்கு ராஜேந்திரன் என்னை தேவடியா

பையா உனக்கு பங்கில்லடா என்று கெட்டவார்த்தையால் திட்டி, ராஜேந்திரன் எனது வலது பக்க கன்னத்தில் அடித்து, கிழே தள்ளி நெஞ்சின் மீது குத்தினார்கள். செந்தில் என்னை கீழே தள்ளி அடியாட்களை வைத்து நெஞ்சின் மீது குத்தினார்கள். எனக்கு மயக்கம் வந்துவிட்டது. எனது மகள்கள் தனம், பச்சியம்மாள், சின்னபாப்பா ஆகியோர் வந்து எனக்கு தண்ணீர் கொடுத்து அழைத்து சென்றார்கள்.

2. அடியாட்களை வைத்து அடித்தனர் அதனால் இரண்டு கால்களிலும் காயம் ஏற்பட்டது. ஆம்புலன்ஸ் வரவலைத்து பென்னாகரம் அரசு மருத்துவமனை அழைத்து சென்றனர். பென்னாகரம் அரசு மருத்துவமனையில் வைத்து வெற்று பேப்பரில் கையொப்பம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் இரண்டு கையொப்பம் பெற்றனர். அதில் ஒன்று வெற்று பேப்பர். மற்றொன்றில் என்ன எழுதியுள்ளது என்பது தெரியாது. போலிசார் என்னிடம் படித்து காட்டவில்லை. மேற்படி கையொப்பத்தை எங்கு வைத்து போட்டேன் என்பது தெரியாது. புகார்வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

1. என்னுடன் பிறந்தவர்கள் 3 பேர். ஆண்கள் 3 பேர். பெண்கள் 3 பேர். முதலில் 3 அக்கால் பிறந்தார்கள். அதன் பிறகு அனுமந்தன், நான், ராஜேந்திரன் பிறந்தோம். முதல் அக்கா பெயர் நல்லம்மாள்(எ) நல்லாயி, பழனியம்மாள், சின்னபாப்பா ஆகும். எனது அப்பாவின் பூர்வீக சொத்து 4 ஏக்கர் 56 செண்ட். எனது அப்பா உயிருடன் இருந்த காலத்தில் ஆண்களுக்கு மட்டும் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் படி தான் நாங்கள் ஓட்டி வந்தோம் என்றால் சரிதான். ஆனால் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொள்ளவில்லை. பின்னாளில் எழுதிக்கொள்ளுமாறு கூறினார்.

2. சீலநாயக்கனூர் சர்வே எண். 309/1, 309/1d. 309/2 ஆகியவற்றை முறையே அனுமந்தன், பழனி, ராஜேந்திரனுக்கும் பிரித்து விட்டார்கள் என்றால் சரியல்ல. அனுமந்தனும், சின்னபாப்பாவும், 19.08.2021 ல் பாகவிடுதைபத்திரத்தை 1 வது எதிரி ராஜேந்திரனுக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகவிடுதலைப்பத்திரம் பென்னாகரம் சார்பதிவக ஆவண எண். 3339/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. 26.08.2022 ல் பழனியம்மாள்

என்பவர் பாகவிடுதலைபத்திரத்தை 1 வது எதிரி ராஜேந்திரனுக்கு எழுதிக்கொடுத்து பென்னாகரம் சார்பதிவக ஆவண எண். 4999/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

3. 29.08.2022 ல் நல்லாயி(எ) நல்லம்மாள் என்பவர் பாகவிடுதலைபத்திரத்தை எனக்கு எழுதிக்கொடுத்து பென்னாகரம் சார்பதிவக ஆவண எண். 5036/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சீலநாயக்கனூர் – பென்னாகரம் ரோட்டில் மாதிரி வரைபடத்தில் காட்டியுள்ளவாறு முதலில் ராஜேந்திரன் என்பவருக்கும் அதற்கடுத்து எனக்கும், அதற்கு பின்னிட்டு அனுமந்தனுக்கும் விவசாய நிலமானது அமைந்து பொது விவசாய கிணறு அமைந்துள்ளது என்றால் சரியல்ல.

4. எதிரிகள் எந்த நிலத்தில் டிராக்டர் வைத்து உழவு ஓட்டினார்கள் என்றால் எனது நிலத்தில் ஓட்டினார்கள். அதனால் தடுத்தேன். அனுமந்தன் பாக விடுதலை எழுதிக்கொடுத்த நிலத்தில் தான் எதிரிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனதுநிலத்திற்கு எப்போதும் வந்து உழவு செய்ததில்லை என்றால் சரியல்ல. சீலநாயக்கனூரில் உள்ள நிலத்தை வாய்மொழி பாகப்பிரிவினை செய்துக்கொடுத்து அவரவர்கள் அனுபவித்து வந்த நிலையில் அனுமந்தனுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் எதிரிகள் ஓட்டி வந்தார்கள் என்றாலும் அதை நானும், அனுமந்தன், எனது மகனும் தடுத்து தகாத வார்த்தையால் பேசினோம் என்றால் சரியல்ல.

5. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளபடி தான் வலது கன்னத்தில் அடித்துவிட்டதாக போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வலது கன்னத்தில் அடித்ததாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா ? என்றால் ஆம். அனுமந்தனின் நிலத்தில் ஓட்டும்போது நான் தடுத்ததாக எதிரிகள் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண். 99/2022 ஆனது CC No. 12/2023 ஆக நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

6. எதிரிகள் என் மீது புகார் கொடுத்த நிலையில் பொய்யான சங்கதிகளை கூறி அவர்கள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரிகள் என்னிடம் தகராறு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தான் தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. இதுநாள் வரை எனது நிலத்தை பொறுத்து

பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா? என்றால் இல்லை. எங்களுக்குள் வாய்மொழி பாகம் ஏற்பட்டதால் தான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**